

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.6.2025 அன்று சென்னை வர்த்தக மையத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக சிறப்பாக செயலாற்றியமைக்காக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமாருக்கு பசுமை விருது வழங்கினார். அதனைத் தொடர்ந்து நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை நேற்று முன்தினம் (08.06.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார் சந்தித்து அவ்விருதினை நேரில் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 06.06.2025 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழாவில் புதிய 9 மகளிர் விடியல் பயண பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிட்., கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குநர் இரா.பொன்முடி, திருச்சிராப்பள்ளி மண்டல பொதுமேலாளர் சதீஷ்குமார், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், போக்குவரத்துக் கழக அலுவலர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## தி.மு.கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் களத்தில் இறங்கி,

# மக்களுடன் பழகி வாக்குகளைக் கழகத்துக்குப் பெற வேண்டும்!

## சென்னை குறிஞ்சி இல்லத்தில் நடைபெற்ற திருமண விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**ன்னை, ஜூன் 10-**

**‘சென்னை, குறிஞ்சி இல்லத்தில் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி மத்திய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் எம்.முக்கேஷ் - இ.ஆர். ஷாமினி இணையருக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத் துணை அமைப்பாளர் சகோதரர் பால்ராஜ்- பாரதி வித்யா இணையருக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் சகோதரி இரா. சுகன்யா-பொ.வெற்றி இணையருக்கும் என மூன்று இணையர்களுக்கும் திருமணத்தை நடத்தி வைத்து, வாழ்த்துரை வழங்கினார்.**

**இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

நேற்று 3 திருமணங்களை நடத்தி வைத்து இருக்கிறோம். காஞ்சிபுரம் பால்ராஜ் - பாரதிவித்யா, இராணிப்பேட்டை முக்கேஷ் - ஷாமினி, காஞ்சிபுரம் சுகன்யா - வெற்றி ஆகிய 3 தம்பதிகளின் திருமண விழாவை இங்கு உங்கள் முன்னிலையில் நடத்தி வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

### மிகப்பெரிய பெருமை

இதில் சகோதரர் பால்ராஜ், சகோதரர் முக்கேஷ் இருவரும் நம் கழக இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள். சகோதரி சுகன்யா கழக இலக்கிய அணியைச் சேர்ந்தவர்.

இப்படி கழகத்தின் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகளின் திருமணங்களை நடத்தி வைப்பதில் எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி, மிகப்பெரிய பெருமை. இந்த மூன்று தம்பதிகளையும் உங்கள் அனைவரின் சார்பாக வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மூவரின் குடும்பங்களுமே நம் கழகத்திற்காக உழைப்பவர்கள். களத்தில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்.

### 46 நாட்கள் சிறை

குறிப்பாக, நம்முடைய காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் பால்ராஜ் அவர்களின் தந்தை காந்தி அவர்கள் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருநகர் கிளைக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றியவர். இந்தித் திணிப்பு எதிர்ப்புக்காக கழகம் நடத்திய சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, 46 நாட்கள் சிறையில் இருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டம், கருப்புக் கொடி காட்டும் போராட்டம் என கழகம் நடத்திய முக்கியமான போராட்டங்கள் பலவற்றிலும் பங்கேற்ற பெருமைக்கு உரியவர்தான் காந்தி அவர்கள். அவரின் இல்லத் திருமண விழாவில் பங்கேற்பது மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது.

அதேபோல, சகோதரர் பால்ராஜ் அவர்களின் தாயார் முனியம்மாள் அவர்களும் கழக மகளிர் அணியில் துணை அமைப்பாளர், அமைப்பாளராக இருந்து, பின்னர் ஒன்றிய துணைச் செயலாளராகி, ஊராட்சிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, தற்போது திருநகர் கிளைக் கழகச் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். கழகத்திற்காக சாலையில் இறங்கி போராட எப்போதும் தயாராக இருக்கக் கூடிய துணிச்சல் மிக்கவர்தான் அக்கா முனியம்மாள் அவர்கள். பெற்றோரே இவ்வளவு தீவிரமான கழகத் தொண்டர்கள் என்றால், மணமகன் பால்ராஜ் அவர்களைப் பற்றி உங்களிடத்தில் நான் சொல்லவே தேவையில்லை.



### உரிய அங்கீகாரம்

2006-ஆம் ஆண்டிலேயே கழக இளைஞர் அணியின் கிளை அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். கடுமையாக உழைத்து, 2011-இல் சித்தாம்பூர் ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராகவும், 2015-இல் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளராகவும் உயர்ந்தவர்தான் சகோதரர் பால்ராஜ் அவர்கள், கழகத்திற்காக கடுமையாக உழைத்தால், நிச்சயம் உரிய அங்கீகாரம் கிடைக்கும் என்பதற்கு, சிறந்த உதாரணம் அவர்.

அதேபோல, நெமிலி மத்திய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக உள்ள மணமகன் முக்கேஷ். மேடைகளில் கழகக் கருத்துகளை மிகவும் தைரியமாகவும், வீரியமாகவும் பேசகூடியவர். சமூக வலைத்தளங்களிலும் மிகுந்த வேகத்துடனும் விவேகத்துடனும் செயல்படக் கூடியவர்.

இவருடைய தந்தை முரளி அவர்கள், விழுப்புரம் கோட்ட தொ.மு.ச. பொருளாளராக சிறப்பாகப் பணியாற்றி வருபவர். இவருடைய அம்மா சரளா முரளி கழகத்தின் நெமிலி மத்திய ஒன்றிய துணைச் செயலாளராக இருப்பவர். இவர்களும் கழகக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சியைத் தருகிறது.

### உயர்கல்வியில் புதிய வரலாறு

இன்றைய நமது கழகத் தலைவர் அவர்கள் உயர்கல்வி வளர்ச்சியில் தமிழ்நாட்டுக்குப் புதிய வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார். அத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட நமது கழகத்திற்கு, கல்வித்துறையைச் சேர்ந்த இரண்டு அரசு ஊழியர்களைப் பெற்றோராகக் கொண்ட சுகன்யா, தானாக விரும்பி, கழகத்தில் தன்னை சேர்த்துக் கொண்டே ஆக வேண்டுமென்று, விடாப்பிடியாக நின்று தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

அதிகம் படித்தவர், அழைப்பிதழைப் பார்த்தாலே தெரியும். மணமகனைவிட அதிகம் படித்திருக்கிறார். ஒருகாலத்தில் ஆண்களுக்கு மட்டும்தான் படிப்பதற்கான உரிமை இருந்தது. பெண்கள் அப்போது படிப்பதற்கான உரிமை கிடையாது. ஆனால், நம் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நம் தலைவர் தலைமையிலான கழக அரசின் கல்விப் புரட்சியால், இன்று அந்தச் சூழல் மாறியிருக்கிறது.

அதனால், பெண்கள் படிப்பதை இனி யாராலும் தடுக்கமுடியாது. அதற்கு மிகச்சிறந்த உதாரணம்தான் சகோதரி சுகன்யா. அவர் இன்னும் படித்துக் கொண்டிருக்கிறார். இனிமேலும் நிறைய படிக்க வேண்டும். அதுவும் முனைவர் பட்டம் பெற படித்துக் கொண்டிருக்கிறார். திருமண வாழ்த்துகளோடு அதற்கும் சேர்த்து, அவர் கல்வியிலும் சிறந்து விளங்க மேன்மேலும் படித்து, பெரும் புகழ் பெறுவதற்கும் வாழ்த்துகளையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மூன்று தம்பதிகள்

எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாமல் தொடர்ந்து பொது மேடைகளில் பேசி, கழகத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கும் சகோதரி சுகன்யா அவர்கள், இனி, அவருடைய கணவருடன் சேர்ந்து கழகப் பணியை எப்போதும் போல தொடர்வார் என்ற நம்பிக்கை நம் அனைவருக்கும் உள்ளது. மூன்று தம்பதிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ஆர்.காந்தி அவர்களும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் சுந்தர் அவர்களும் பல நாள் காத்திருந்து இந்தத் திருமணங்களுக்கு என்னிடம் தேதி வாங்கினார்கள். இந்தத் திருமணம் நடப்பதற்கு காரணமாக உள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட நம் கழகத்தினர் அனைவருக்கும் எனது அன்பையும், பாராட்டுகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருமணம் செய்திருக்கின்ற தம்பதிகள் மூவருமே அதிகம் படித்தவர்கள். எனவே, அவர்களுக்கு அதிகமாக அறிவுரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்று மட்டும்தான். நம் தலைவர் அவர்களும் அதைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இன்று தம்பதியினராக இணைய இருக்கும் நீங்கள் நல்ல நண்பர்களாக, சுயமரியாதையோடு, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு உங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி அழகான ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### திராவிட மாடல் அரசு

இங்கு நீங்கள் சிறப்பான திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க வந்துள்ளீர்கள். இன்றும் 10 மாதங்களில் 2026 சட்டமன்றத் தேர்தலை நம் இயக்கம் எதிர்கொள்ள இருக்கிறது. தலைவர் அவர்கள் நேற்றுகூட மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசும்போது சொன்னார் மக்களோடு மக்களாகப் பழகி அந்த வெற்றியை பெற வேண்டும். வருகிற சட்டமன்றத் தேர்தலில் இரண்டாவது முறையாக திராவிட மாடல் அரசு ஆட்சியில் அமர வேண்டும்.

இரண்டாவது முறையாக நம் கழகத்தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால் அதற்கு இங்கு வந்து இருக்கின்ற இரண்டு மாவட்டக் கழகங்களைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும், தொண்டர்களும் களத்தில் இறங்கி மக்களோடு மக்களாகப் பழகி அவர்களின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்று, அவர்களின் வாக்குகளை கழகத்துக்குப் பெற்றுத் தரவேண்டும்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நம் முதலமைச்சர் அவர்கள்தான் முதலமைச்சர் நாற்காலியில் அமரப் போகிறார் என்ற உறுதிமொழியை நீங்கள் எல்லாம் இந்த திருமண விழாவில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இவ்விழாவில் அமைச்சரும், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளருமான காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், ஜி.செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.அரசு, சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் மூர்த்தி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பெருமாள், ரவீந்திரன், எஸ்.பாபு, சிற்றரசு, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் யுவராஜ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பரத், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் மணி, அருள்முருகன், சஞ்சய்காந்தி, ஆண்டோ சிரில்ராஜ், யுவராஜ் , முரளி உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோவிலில் ராஜ கோபுரத்தில் இருந்து புதிய படிக்கட்டு அமைக்கும் பணிக்கு அமைச்சர் சு.முத்துசாமி அடிக்கல் நாட்டி துவங்கி வைத்தார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, கே.ஈ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ. மு.சுப்ரமணியம், மேயர் சு.நாகரத்தினம், எல்லப்பாளையம் சிவகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கோவில் கமிட்டி குழு தலைவர்கள் உறுப்பினர்கள், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் திருப்பூர் மண்டலம் சார்பில் புதிய அரசுப்பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலகுழுத் தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.